மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இந்தியக் குற்றவியல் பிரிவினை ஆராய்ந்ததற்குப் பிறகுதான் சட்டத்துறை இந்த யோசனையை அரசுக்கு அளித்திருக்கிறது.

திரு. த. சோணையா : தலைவர் அவர்களே, முதலில், 7-ம் 9-ம் இருந்ததாகவும், அதை 8-ம் 8-மாக ஆக்கினார்களென்றும் கூறும்போது, தீர்ப்பில், நடந்த தவறுக்குக் குறிப்பு ஏதாவது எழுதப்பட்டிருக்கிறதா என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்த முன்சீப் கோர்ட் தீர்ப்பிலே, தலைவர்மீது எந்த குற்றச்சாட்டும் சுமத்தவில்லை யென்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

பெண்கள்-குழந்தைகள் மருத்துவ மனை

* 314. வினா—**திரு. கே. எ. வகாப் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை எழும்பூரில் உள்ள பெண்கள்-குழந்தைகள் ஆஸ்பத்திரி எப்போது கட்டப்பட்டது?

(இ) எத்தனை படுக்கை வசதி உள்ளது?

(உ) அதை விரிவுபடுத்திக் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) 1882-ம் ஆண்டில் கட்டப்பட்டது.

(இ) 494 படுக்கைகள்.

(உ) இது மருத்துவக் கல்வி இயக்குநரின் பரிசிலனையில் உள்ளது.

திரு. கே. எ. வகாப் : சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்பு 400 படுக்கை வசதிகளோடு கட்டப்பட்டது. ஆனால் இன்றைக்கு ஏறத்தாழ ஆயிரம் பேஷண்டுகள் சேர்க்கப்படுகிறார்கள். எப்படிக் குடும்பக் கட்டுப்பாட்டை அதிகமாக வற்புறுத்துகிறோமோ, அதேபோல் குழந்தை பிறப்பதற்கும் வசதி செய்து தர இதை விரிவுபடுத்த அரசு முயற்சி செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, 1882-ம் ஆண்டு மருத்துவமனை கட்டப்பட்டது. 494 படுக்கைகளும் அப்பொழுதே கொடுக்கப்பட்டவை அல்ல. பல ஆண்டுகளாக வளர்ந்துதான் தற்போதுள்ள படுக்கை எண்ணிக்கை 494-ஆக உயர்த்திருக்கிறது. அந்த எண்ணிக்கை முழுவதுமே அப்பொழுதே அமைக்கப்பட்டது என்று கருதக் கூடாது.

1973 மார்ச் 10]

இதிலே, ஏறத்தாழ 200 படுக்கைகளுக்கேற்றபடி, கட்டடங்களை விரிவுப்படுத்த ஆய்வுரை வந்தது. அது ஆலோசனை செய்யப்பட்டது. அதற்கு ரூ. 29 லட்சம் செலவாகும். அந்தப் பணம் 10 சுகாதார ஆரம்ப நிலையம் கட்டுவதற்குப் பயன்படும். ஆகவே தரவில்லை. மறுபடியும் ரூ. 18 லட்சம் கேட்டார்கள். அது 6 சுகாதார ஆரம்ப நிலையம் கட்டப் பயன்படும். ஆகவே தரமுடியவில்லை. இப்பொழுது ரூ. 6 லட்சம் செலவில் 150 படுக்கைகளை அமைத்துத் தர ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. அது ஏற்புடையதாக இருந்தால் அரசு ஏற்றுக்கொள்ளும்.

(திரு. நா. வீராசாமி—தலைமை)

THIRU K. M. SUBRAMANIAM : Sir, in view of the fact that both in Egmore and Triplicane the Women 's Hospital is in a congested area, is there any proposal under the consideration of the Government to have a Hospital somewhere in Saidapet or Guindy or Adyar so that it can be decentralised and patients need not go all the distance ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, சிறந்த பொது மருத்துவ மனை ஒன்றை சென்னை போன்ற நகரத்தில், கொஞ்சம் அதிக வசதியுள்ளதாக தகுந்த, பரப்புள்ள இடத்தில் ஏற்படுத்த வேண்டுமென்று விரும்பினால் குறைந்தது ரூ. 1 கோடி செலவழித்தால்தான் தகுந்த மருத்துவ மனை வரும். அப்படிப்பட்ட பெரிய திட்டத்தை நிறைவேற்றுவதற்கு, இன்றைக்கு அரசாங்கம் கிராமப் பகுதியிலே மருத்துவ வசதியை அதிகரிக்கவேண்டுமென்ற கொள்கையை ஏற்றுக் கொண்ட காரணத்தால், பெருநிதியை ஒதுக்க முடியாது. மத்திய அரசு கிராமப்புறத் திட்டங்களுக்கு முழு அளவு நிதி உதவி செய்ய முன்வருமானால், இப்படிப்பட்ட திட்டத்தை தமிழக அரசு நிறைவேற்ற நிதி வசதி கிடைக்கும். ஆனால் மத்திய அரசு பணம் இருக்கிற இடத்தையே இன்னும் தேடிக்கொண்டிருக்கிறது.

திரு. ஆ. பரந்தாமன் : எழும்பூரில் உள்ள மகப்பேறு மருத்துவ மனையில் உள்ள டாக்டர்கள் எல்லா துறையிலும் தேர்ச்சி பெற்ற பெண் டாக்டர்களா, அல்லது ஆண் டாக்டர்களும் அங்கே சென்று கவனித்து வருகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அறிவுத் துறையிலே ஆண் பெண் வேற்றுமை கிடையாது. மிகச் சிறந்த டாக்டர்கள் இருபாலாருமே கவனித்துக்கொள்கிறார்கள். கோஷா ஆஸ்பத்திரி இருக்குமானால் அவர்களுக்கு மட்டும்தான், பெண் டாக்டர்கள் சிகிச்சை அளிக்க வேண்டுமென்ற

[1973 மார்ச் 10

முறை இருக்கிறது. கோஷா பிரிவில்தான் அப்படி இருக்கிறது. மற்றவர்களுக்கு அப்படிக் கட்டாயம் இல்லை. ஆனால் பொதுவாக மகப்பேறு துறையில் பெண்கள் ஏராளமானவர்கள் பயிற்சி பெற்றவர்களாக இருக்கிறார்கள்.

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, கோஷா ஆஸ்பிட்டலுக்குத்தான் அந்த முறை என்று கூறினார்கள். பிரசவ ஆஸ்பத்திரியாக இருக்கிற காரணத்தால், பெண் டாக்டர்களே பார்க்கவேண்டும், ஆண் டாக்டர்கள் பார்க்கக் கூடாது என்ற முறையிலே, அதிகமான பெண் டாக்டர்களை, நிபுணர்களை நியமிக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மருத்துவத்திலும், ஆபத்திலும் இந்த இனப் பாகுபாடு பார்ப்பதில்லை. அப்படிப் பார்ப்பதே கோஷா மனப்பான்மை. அது திரு. வகாப் அவர்களுக்கு ஏற்படக் கூடாது.

*315 வினா—**திரு. கே. எ. வகாப் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை எழும்பூரில் உள்ள பெண்கள் பிரசவ ஆஸ்பத்திரியில் உள்ள லிப்ட் நல்ல முறையில் வேலை செய்கிறதா?

(இ) இல்லையெனில், அதற்கு வேறு லிப்ட் பொருத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) தற்சமயம் டி.சி. (D.C) மின்னோட்டத்திலியங்கும் லிப்டிற்குப் பதிலாக நடப்பாண்டில் ஏ.சி. (A C) மின்னோட்டத்திலியங்கும் ஒரு புதிய லிப்ட் பொருத்துவதற்காக ரூ. 90,000 ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, ஒப்புக்கொள்ளப்பட்டு சில காலம் ஆகியும் இன்னும், பிரசவம் நடக்கின்ற அந்த மருத்துவமனையிலே லிப்ட் எவ்வளவு முக்கியமானது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களும் நாமும் உணர்வோம், ஆகவே, இந்த லிப்டை உடனடியாக அமைப்பதற்கும்—'ராம்ப்' என்ற வசதியை, அதைக் கட்டித் தரும்படியாகக் கேட்டிருக்கிறார்கள் என்று அறிகிறேன்—அதையும் கட்டித் தந்தால், மற்ற ஆஸ்பத்திரிகளோடு இந்தப் பிரசவ ஆஸ்பத்திரிக்கும் மிக வசதியாக இருக்கும். அதைச் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இந்த ஆணை பிறப்பிக்கப்பட்டு, இப்பொழுது 3 திங்கள்கூட ஆகவில்லை, ஏனென்றால், டிசம்பர் திங்களிலே, ஏ.சி. லிப்ட் அமைக்கப்பட வேண்டுமென்று, 15—12—1972-ல்தான்,

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS